ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமாநுஜாய நம:



மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள்
அருளிச் செய்த தமிழ் வேதமாகிய
நாலாயிர திவ்ய ப்ரபந்தம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த

# கோவில் திருமொழி



**Second Edition: 2007**
First Edition: 2005

Copyright © 2007-2008
All Rights Reserved

## கோவில் திருமொழி

**பெரிய திருமொழி தனியன்கள்** ........ 3
**01-01 - வாடினேன்** ........ 4
**01-09 - தாயே தந்தை** ........ 5
**02-03 - விற்பெரு விழவும்** ........ 7
**02-07 - திவளும்** ........ 9
**03-06 - தூவிரிய** ........ 11
**04-09 - நும்மைத் தொழுதோம்** ........ 12
**05-08 - ஏழை ஏதலன்** ........ 14
**06-09 - பெடை அடர்த்த** ........ 16
**07-04 - கண் சோர** ........ 17
**08-02 - தெள்ளியீர்** ........ 19
**09-09 - மூவரில்** ........ 21
**10-08 - காதில் கடிப்பு** ........ 22
**11-08 - மாற்றமுள** ........ 24

## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# கோவில் திருமொழி

---

## பெரிய திருமொழி தனியன்கள்

### திருக்கோட்டியூர் நம்பி அருளிச் செய்தது

கலயாமி கலித்$_4$வம்ஸம் கவிம் லோகதி$_3$வாகரம் |
யஸ்ய கோபி$_4$: ப்ரகாஷாபி$_4$ராவித்$_3$யம் நிஹதம் தம: ||

### எம்பெருமானார் அருளிச் செய்தது

வாழி பரகாலன் வாழி கலிகன்றி *
வாழி குறையலூர் வாழ் வேந்தன் - வாழியரோ *
மாயோனை வாள் வலியால் மந்திரங்கொள் மங்கையர் கோன் *
தூயோன் சுடர்மான வேல்

### கூரத்தாழ்வான் அருளிச் செய்தது

நெஞ்சுக்கிருள் கடி தீபம் அடங்கா நெடும் பிறவி
நஞ்சுக்கு நல்ல அமுதம் * தமிழநன்னூல் துறைகள்
அஞ்சுக்கு இலக்கியம் ஆரண சாரம் * பர சமயப்
பஞ்சு கனலின் பொறி * பரகாலன் பனுவல்களே

### எம்பார் அருளிச் செய்தது

எங்கள் கதியே இராமானுச முனியே *
சங்கைக் கெடுத்தாண்ட தவராசா! * - பொங்கு புகழ்
மங்கையர் கோன் ஈந்த மறை ஆயிரம் அனைத்தும் *
தங்கு மனம் நீ எனக்குத் தா

### சோமாசியாண்டான் அல்லது மணவாள மாமுனிகள் அருளிச் செய்தது

மாலைத் தனியே வழி பறிக்க வேணும் என்று *
கோலிப் பதி இருந்த கொற்றவனே * - வேலை
அணைத்தருளும் கையால் அடியேன் வினையைத் *
துணித்தருள வேணும் துணிந்து

---

## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி 1-1 - வாடினேன்
## (பெரிய திருமந்திரத்தின் பெருமை)

948 * வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால் * பெருந்துயர் இடும்பையில் -
பிறந்து *
கூடினேன் கூடி இளையவர் தம்மோடு * அவர் தரும் கலவியே கருதி **
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால் * உணர்வெனும் பெரும் பதம் -
தெரிந்து[1]*
நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன் * நாராயணா என்னும்
நாமம் 1

949 * ஆவியே! அமுதே! என நினைந்துருகி * அவரவர் பணைமுலை துணையா *
பாவியேன் உணராது எத்தனை பகலும் * பழுது போய் ஒழிந்தன நாள்கள் **
தூவிசேர் அன்னம் துணையொடும் புணரும் * சூழ்புனற் குடந்தையே -
தொழுது * என்
நாவினால் உய்ய நான் கண்டு கொண்டேன் * நாராயணா என்னும்
நாமம் 2

950 சேமமே வேண்டித் தீவினை பெருக்கித் * தெரிவைமாருருவமே மருவி *
ஊமனார் கண்ட கனவிலும் பழுதாய் * ஒழிந்தன கழிந்த அந்நாள்கள் **
காமனார் தாதை நம்முடை அடிகள் * தம்மடைந்தார் மனத்திருப்பார் *
நாமம் நான் உய்ய நான் கண்டு கொண்டேன் * நாராயணா என்னும் -
நாமம் 3

951 வென்றியே வேண்டி வீழ் பொருட்கிரங்கி * வேற்கணார் கலவியே கருதி *
நின்றவா நில்லா நெஞ்சினை உடையேன் * என் செய்கேன்? நெடு -
விசும்பணவும் **
பன்றியாய் அன்று பாரகங்கீண்ட * பாழியான் ஆழியான் அருளே *
நன்று நான் உய்ய நான் கண்டு கொண்டேன் * நாராயணா என்னும் -
நாமம் 4

952 கள்வனேனானேன் படிறு செய்திருப்பேன் * கண்டவா திரிதந்தேனேலும் *
தெள்ளியேனானேன் செல்கதிக்கமைந்தேன் * சிக்கெனத் திருவருள் -
பெற்றேன் **
உள்ளெலாம் உருகிக் குரல் தழுத்தொழிந்தேன் * உடம்பெலாம் கண்ண -
நீர் சோர *
நள்ளிருள் அளவும் பகலும் நான் அழைப்பன் * நாராயணா என்னும் -
நாமம் 5

[1] திரிந்து

953 * எம்பிரான் எந்தை என்னுடைச் சுற்றம் * எனக்கரசு என்னுடை வாணாள் *
அம்பினால் அரக்கர் வெருக்கொள நெருக்கி * அவர் உயிர் செகுத்த எம் -
அண்ணல் **
வம்புலாம் சோலை மாமதிள் * தஞ்சை மாமணிக்கோயிலே வணங்கி *
நம்பிகாள்! உய்ய நான் கண்டு கொண்டேன் * நாராயணா என்னும்
நாமம் 6

954 இற்பிறப்பறியீர் இவர் அவர் என்னீர் * இன்னதோர் தன்மை என்று உணரீர் *
கற்பகம் புலவர்களை கணென்று உலகில் * கண்டவா தொண்டரைப் பாடும் **
சொற்பொருளாளீர் சொல்லுகேன் வம்மின் * சூழ்புனற் குடந்தையே -
தொழுமின் *
நற்பொருள் காண்மின் பாடி நீர் உய்ம்மின் * நாராயணா என்னும் -
நாமம் 7

955 கற்றிலேன் கலைகள் ஐம்புலன் கருதும் * கருத்துளே திருத்தினேன் மனத்தை *
பெற்றிலேன் அதனால் பேதையேன் நன்மை * பெருநிலத்து -
ஆருயிர்க்கெல்லாம் **
செற்றமே வேண்டித் திரிதர்வேன் தவிர்ந்தேன் * செல்கதிக்கு -
உய்யுமாறெண்ணி *
நல்துணையாகப் பற்றினேன் அடியேன் * நாராயணா என்னும் நாமம் 8

956 * குலம் தரும் செல்வம் தந்திடும் * அடியார் படு துயர் ஆயினவெல்லாம் *
நிலந்தரஞ்செய்யும் நீள் விசும்பருளும் * அருளொடு பெருநிலம் அளிக்கும் **
வலந்தரும் மற்றும் தந்திடும் * பெற்ற தாயினும் ஆயின செய்யும் *
நலந்தருஞ்சொல்லை நான் கண்டு கொண்டேன் * நாராயணா என்னும் -
நாமம் 9

957 * மஞ்சுலாஞ்சோலை வண்டறை மாநீர் * மங்கையார் வாள் கலி கன்றி *
செஞ்சொலால் எடுத்த தெய்வ நல்மாலை * இவை கொண்டு சிக்கெனத் -
தொண்டீர்! **
துஞ்சும் போது அழைமின் துயர் வரில் நினைமின் * துயரிலீர் சொல்லிலும்
நன்றாம் *
நஞ்சு தான் கண்டீர் நம்முடை வினைக்கு * நாராயணா என்னும் நாமம் 10

**அடிவரவு:** வாடினேன் ஆவியே சேமம் வென்றி கள்வனேன் எம்பிரான் இற்பிறப்பு கற்றிலேன் குலம் மஞ்சு வாலி

---

**திருமங்கையாழ்வார் அருளிச் செய்த**

## பெரிய திருமொழி 1-9 - தாயே தந்தை

**(திருவேங்கடம் 2)**

1028 * தாயே தந்தை என்றும் * தாரமே கிளை மக்கள் என்றும் *
நோயே பட்டொழிந்தேன் * உன்னைக்[2] காண்பதோர் ஆசையினால் **
வேயேய் பூம்பொழில் சூழ் * விரையார் திருவேங்கடவா! *
நாயேன் வந்தடைந்தேன் * நல்கி ஆளென்னைக் கொண்டருளே 1

1029 மானேய் கண் மடவார் * மயக்கில் பட்டு மாநிலத்து *
நானே நானாவித * நரகம் புகும் பாவம் செய்தேன் **
தேனேய் பூம்பொழில் சூழ் * திருவேங்கட மாமலை * என்
ஆனாய்! வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே 2

1030 கொன்றேன் பல்லுயிரைக் * குறிக்கோள் ஒன்றிலாமையினால் *
என்றேனும் இரந்தார்க்கு * இனிதாக உரைத்தறியேன் **
குன்றேய் மேகமதிர் * குளிர் மாமலை வேங்கடவா! *
அன்றே வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே 3

1031 குலந்தான் எத்தனையும் * பிறந்தே இறந்து எய்த்தொழிந்தேன் *
நலந்தான் ஒன்றுமிலேன் * நல்லதோர் அறம் செய்துமிலேன் **
நிலம் தோய் நீள்முகில்[3] சேர் * நெறியார் திருவேங்கடவா! *
அலந்தேன் வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே 4

1032 எப்பாவம் பலவும் * இவையே செய்து இளைத்தொழிந்தேன் *
துப்பா! நின்னடியே * தொடர்ந்தேத்தவும் கிற்கின்றிலேன் **
செப்பார் திண் வரை சூழ் * திருவேங்கட மாமலை * என்
அப்பா! வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே 5

1033 மண்ணாய் நீர் எரி கால் * மஞ்சுலாவும் ஆகாசமுமாம் *
புண்ணார் ஆக்கை தன்னுள் * புலம்பித் தளர்ந்து எய்த்தொழிந்தேன் **
விண்ணார் நீள் சிகர * விரையார் திருவேங்கடவா! *
அண்ணா! வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே 6

1034 தெரியேன் பாலகனாய்ப் * பல தீமைகள் செய்துமிட்டேன் *
பெரியேன் ஆயின பின் * பிறர்க்கே உழைத்து ஏழை ஆனேன் **
கரி சேர் பூம்பொழில் சூழ் * கனமாமலை வேங்கடவா! *
அரியே! வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே 7

1035 நோற்றேன் பல்பிறவி * நுன்னைக் காண்பதோர் ஆசையினால் *
ஏற்றேன் இப்பிறப்பே * இடர் உற்றனன் எம்பெருமான்! **
கோல்தேன் பாய்ந்தொழுகும் * குளிர்சோலை சூழ் வேங்கடவா! *
ஆற்றேன் வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே 8

---

[2] நுன்னைக்

[3] நீர்முகில்

1036 பற்றேல் ஒன்றுமிலேன் * பாவமே செய்து பாவி ஆனேன் *
மற்றேல் ஒன்றறியேன் * மாயனே! எங்கள் மாதவனே! **
கல்தேன் பாய்ந்தொழுகும் * கமலச் சுனை வேங்கடவா! *
அற்றேன் வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே 9

1037 * கண்ணாய் ஏழுலகுக்கு * உயிராய எங்கார் வண்ணனை *
விண்ணோர் தாம் பரவும் * பொழில் வேங்கட வேதியனை **
திண்ணார் மாடங்கள் சூழ் * திருமங்கையர் கோன் கலியன் *
பண்ணார் பாடல் பத்தும் * பயில்வார்க்கு இல்லை பாவங்களே 10

**அடிவரவு:** தாய் மான் கொன்றேன் குலம் எப்பாவம் மண் தெரியேன் நோற்றேன் பற்றேல் கண்ணாய் கண்

---

### திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி 2-3 - விற்பெரு விழவும்
### (திருவல்லிக்கேணி)

1068 * விற்பெரு விழவும் கஞ்சனும் மல்லும் * வேழமும் பாகனும் வீழ *
செற்றவன் தன்னை புரமெரி செய்த * சிவனுறு துயர் களை தேவை **
பற்றலர் வீயக் கோல் கையில் கொண்டு * பார்த்தன் தன் தேர் முன் -
நின்றானை *
சிற்றவை பணியால் முடி துறந்தானைத் * திருவல்லிக்கேணிக்
கண்டேனே 1

1069 * வேதத்தை வேதத்தின் சுவைப் பயனை * விழுமிய முனிவர்கள் விழுங்கும் *
கோதில் இன் கனியை நந்தனார் களிற்றைக் * குவலயத்தோர் -
தொழுதேத்தும் **
ஆதியை அமுதை என்னை ஆளுடை அப்பனை * ஒப்பவரில்லா
மாதர்கள் வாழும் * மாடமா மயிலைத் * திருவல்லிக்கேணிக்
கண்டேனே 2

1070 வஞ்சனை செய்யத் தாயுருவாகி * வந்த பேய் அலறி மண் சேர *
நஞ்சமர் முலையூடு உயிர் செக உண்ட * நாதனைத் தானவர் கூற்றை **
விஞ்சை வானவர் சாரணர் சித்தர் * வியந்துதி செய்யப் பெண்ணுருவாகி *
அஞ்சுவை அமுதம் அன்றளித்தானைத் * திருவல்லிக்கேணிக் -
கண்டேனே 3

1071 இந்திரனுக்கென்று ஆயர்கள் எடுத்த * எழில் விழவில் பழ நடை செய் *
மந்திர விதியில் பூசனை பெறாது * மழை பொழிந்திடத் தளர்ந்து ** ஆயர்
எந்தம்மோடு இன ஆனிரை தளராமல் * எம்பெருமான்! அருள் என்ன *
அந்தமில் வரையால் மழை தடுத்தானைத் * திருவல்லிக்கேணிக் -

கண்டேனே 4

1072 இன்துணைப் பதுமத்து அலர்மகள் தனக்கும் இன்பன் * நற்புவி தனக்கு - இறைவன் *
தன்துணை ஆயர்பாவை நப்பின்னை தனக்கு இறை * மற்றையோர்க்கு எல்லாம்
வன்துணை ** பஞ்ச பாண்டவர்க்காகி வாயுரை தூது சென்று * இயங்கும்
என்துணை[4] * எந்தை தந்தை தம்மானைத் * திருவல்லிக்கேணிக் - கண்டேனே 5

1073 அந்தகன் சிறுவன் அரசர் தம் அரசற்கிளையவன் * அணியிழையைச் சென்று *
எந்தமக்கு உரிமை செய் எனத் தரியாது * எம்பெருமான்! அருள் என்ன **
சந்தமர்[5] குழலாள் அலக்கண் நூற்றுவர் தம் * பெண்டிரும் எய்தி நூல் - இழப்ப *
இந்திரன் சிறுவன் தேர் முன் நின்றானைத் * திருவல்லிக்கேணிக் கண்டேனே 6

1074 * பரதனும் தம்பி சத்துருக்கனனும் * இலக்குமனோடு மைதிலியும் *
இரவும் நன்பகலும் துதி செய்ய நின்ற * இராவணாந்தகனை எம்மானை **
குரவமே கமழும் குளிர் பொழிலூடு * குயிலொடு மயில்கள் நின்றால *
இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியாத் * திருவல்லிக்கேணிக் - கண்டேனே 7

1075 * பள்ளியில் ஓதி வந்த தன் சிறுவன் * வாயில் ஓராயிர நாமம் *
ஒள்ளியவாகிப் போத ஆங்கு அதனுக்கு * ஒன்றுமோர் பொறுப்பிலனாகி **
பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண் புடைப்பப் * பிறை எயிற்று அனல் - விழிப் பேழ் வாய் *
தெள்ளிய சிங்கமாகிய தேவைத் * திருவல்லிக்கேணிக் கண்டேனே 8

1076 * மீனமர் பொய்கை நாள் மலர் கொய்வான் * வேட்கையினோடு - சென்றிழிந்த *
கானமர் வேழம் கை எடுத்தலறக் * கரா அதன் காலினைக் கதுவ **
ஆனையின் துயரம் தீரப் புள்ளூர்ந்து * சென்று நின்று ஆழி தொட்டானை *
தேனமர் சோலை மாடமா மயிலைத் * திருவல்லிக்கேணிக் கண்டேனே 9

1077 * மன்னு தண் பொழிலும் வாவியும் மதிளும் * மாட மாளிகையும் மண்டபமும் *
தென்னன் தொண்டையர் கோன் செய்த நல்மயிலைத் * திருவல்லிக்கேணி - நின்றானை **
கன்னி நன்மாட மங்கையர் தலைவன் * காமரு சீர்க் கலி கன்றி *
சொன்ன சொல் மாலை பத்துடன் வல்லார் * சுகம் இனிதாள்வர் -

[4] இன்துணை
[5] சந்தமல்

வானுலகே 10

**அடிவரவு:** வில் வேதத்தை வஞ்சனை இந்திரனுக்கு இன்துணை அந்தகன் பரதன் பள்ளியில் மீனமர் மன்னு அன்றாயர்

---

**திருமங்கையாழ்வார் அருளிச் செய்த**

## பெரிய திருமொழி 2-7 - திவளும்

**(திருவிடவெந்தை - தலைவனைப் பிரிந்த தலைவியின் ஆற்றாமை கண்ட தாய் இரங்கும் பாசுரம்)**

1108 * திவளும் வெண்மதி போல் திருமுகத்தரிவை * செழுங்கடல் அமுதினில் - பிறந்த
அவளும் * நின்னாகத்திருப்பதும் அறிந்தும் * ஆகிலும் ஆசை விடாளால் **
குவளையங் கண்ணி கொல்லியம் பாவை * சொல்லு நின் தாள் நயந்திருந்த
இவளை * உன் மனத்தால் என் நினைந்திருந்தாய்? * இடவெந்தை - எந்தை பிரானே! 1

1109 துளம்படு முறுவல் தோழியர்க்கு அருளாள் * துணை முலை சாந்து கொண்டு - அணியாள் *
குளம்படு குவளைக் கண்ணிணை எழுதாள் * கோல நல்மலர் குழற்கு - அணியாள் **
வளம்படு முந்நீர் வையம் முன் அளந்த * மாலென்னும் மாலின மொழியாள் *
இளம்படி இவளுக்கு என் நினைந்திருந்தாய்? * இடவெந்தை எந்தை - பிரானே! 2

1110 சாந்தமும் பூணும் சந்தனக் குழம்பும் * தடமுலைக்கு அணியிலும் தழலாம் *
போந்த வெண் திங்கள் கதிர் சுட மெலியும் * பொரு கடல் புலம்பிலும் - புலம்பும் **
மாந்தளிர் மேனி வண்ணமும் பொன்னாம் * வளைகளும் இறை நில்லா * - என்தன்
ஏந்திழை இவளுக்கு என் நினைந்திருந்தாய்? * இடவெந்தை எந்தை பிரானே! 3

1111 ஊழியில்[6] பெரிதால் நாழிகை என்னும் * ஒண் சுடர் துயின்றதால் என்னும் *
ஆழியும் புலம்பும் அன்றிலும் உறங்கா * தென்றலும் தீயினிற் கொடிதாம் **
தோழியோ! என்னும் துணைமுலை அரக்கும் * சொல்லுமின் என் செய்கேன்? - என்னும் *
ஏழை என் பொன்னுக்கு என் நினைந்திருந்தாய்? * இடவெந்தை எந்தை - பிரானே! 4

---

[6] ஊழியின்

1112 ஓதிலும் உன் பேர் அன்றி மற்றோதாள் * உருகும் நின் திருவுரு நினைந்து *
காதன்மை பெரிது கையறவுடையள் * கயல் நெடுங்கண் துயில் மறந்தாள் **
பேதையேன் பேதை பிள்ளைமை பெரிது * தெள்ளியள் வள்ளி நுண்மருங்குல் *
ஏதலர் முன்னா என் நினைந்திருந்தாய்? * இடவெந்தை எந்தை -
பிரானே! 5

1113 தன் குடிக்கு ஏதும் தக்கவா நினையாள் * தடங்கடல் நுடங்கெயிலிலங்கை *
வன்குடி மடங்க வாளமர் தொலைத்த * வார்த்தை கேட்டு இன்புறும் -
மயங்கும் **
மின்கொடி மருங்குல் சுருங்க மேல் நெருங்கி * மென்முலை பொன் -
பயந்திருந்த *
என்கொடி இவளுக்கு என் நினைந்திருந்தாய்? * இடவெந்தை எந்தை
பிரானே! 6

1114 உளங்கனிந்திருக்கும் உன்னையே பிதற்றும் * உனக்கன்றி எனக்கு -
அன்பொன்று இலளால் *
வளங்கனி பொழில்சூழ் மாலிருஞ்சோலை * மாயனே! என்று வாய் வெருவும் **
களங்கனி முறுவல் காரிகை பெரிது * கவலையோடு அவலம் சேர்ந்திருந்த *
இளங்கனி இவளுக்கு என் நினைந்திருந்தாய்? * இடவெந்தை எந்தை -
பிரானே! 7

1115 * அலங்கெழு தடக்கை ஆயன் வாயாம்பற்கு * அழியுமால் என் உள்ளம் -
என்னும் *
புலங்கெழு பொருநீர்ப் புட்குழி பாடும் * போதுமோ நீர்மலைக்கு? என்னும் **
குலங்கெழு கொல்லி கோமளவல்லி * கொடி இடை நெடு மழைக் கண்ணி *
இலங்கெழில் தோளிக்கு என் நினைந்திருந்தாய்? * இடவெந்தை எந்தை -
பிரானே! 8

1116 பொன்குலாம் பயலை பூத்தன மெந்தோள் * பொருகயற் கண்துயில் -
மறந்தாள் *
அன்பினால் உன் மேல் ஆதரம் பெரிது * இவ்வணங்கினுக்கு[7] உற்ற நோய் -
அறியேன் **
மின்குலா மருங்குல் சுருங்க மேல் நெருங்கி * வீங்கிய வனமுலையாளுக்கு *
என்கொலாம்? குறிப்பில் என் நினைந்திருந்தாய்? * இடவெந்தை எந்தை -
பிரானே! 9

1117 * அன்னமும் மீனும் ஆமையும் அரியும் ஆய * எம் மாயனே! அருளாய் *
என்னும் இன்தொண்டர்க்கு இன்னருள் புரியும் * இடவெந்தை எந்தை -
பிரானை **
மன்னு மாமாட மங்கையர் தலைவன் * மானவேல் கலியன் வாய் ஒலிகள் *

[7] என் அணங்கினுக்கு

பன்னிய பனுவல் பாடுவார் * நாளும் பழவினை பற்றறுப்பாரே 10

**அடிவரவு:** திவளும் துளம் சாந்தம் ஊழியில் ஓதிலும் தன் உளம் அலம் பொன் அன்னம் திரிபுரம்

---

## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி 3-6 - தூவிரிய
### (திருவாலி 2 - தலைவனைப் பிரிந்த தலைவி இரங்கிக் கூறிய பாசுரம்)

1198 * தூவிரிய மலர் உழக்கித் * துணையோடும் பிரியாதே *
பூவிரிய மது நுகரும் * பொறிவரிய சிறு வண்டே! **
தீவிரிய மறை வளர்க்கும் * புகழாளர் திருவாலி *
ஏவரி வெஞ்சிலையானுக்கு * என் நிலைமை உரையாயே 1

1199 பிணி அவிழும் நறுநீல * மலர் கிழியப் பெடையோடும் *
அணிமலர் மேல் மது நுகரும் * அறுகால சிறு வண்டே! **
மணிகெழுநீர் மருங்கலரும் * வயலாலி மணவாளன் *
பணி அறியேன் நீ சென்று * என் பயலை நோய் உரையாயே 2

1200 நீர் வானம் மண் எரி காலாய் * நின்ற நெடுமால் * தன்
தாராய நறுந்துளவம் * பெருந்தகையேற்கு அருளானே! **
சீராரும் வளர் பொழில் சூழ் * திருவாலி வயல் வாழும் *
கூர்வாய சிறு குருகே! * குறிப்பறிந்து கூறாயே 3

1201 தானாக நினையானேல் * தன் நினைந்து நைவேற்கு * ஓர்
மீனாய கொடி நெடுவேள் * வலி செய்ய மெலிவேனோ? **
தேன்வாய வரி வண்டே! * திருவாலி நகராளும் *
ஆனாயற்கு என்னுறு நோய் * அறியச் சென்று உரையாயே 4

1202 வாளாய கண் பனிப்ப * மென்முலைகள் பொன் அரும்ப *
நாள் நாளும் * நின் நினைந்து நைவேற்கு ** ஓ! மண் அளந்த
தாளாளா! தண் குடந்தை நகராளா! * வரை எடுத்த
தோளாளா! * என் தனக்கு ஓர் * துணையாளன் ஆகாயே! 5

1203 தாராய தண் துளவ * வண்டுழுத வரை மார்பன் *
போரானைக் கொம்பொசித்த * புட்பாகன் என் அம்மான் **
தேராரும் நெடு வீதித் * திருவாலி நகராளும் *
காராயன் என்னுடைய * கனவளையும் கவர்வானோ! 6

1204 கொண்டரவத் திரை உலவு * குரை கடல் மேல் குலவரை போல் *
பண்டரவின் அணைக் கிடந்து * பார் அளந்த பண்பாளா! **

வண்டமரும் வளர் பொழில் சூழ் * வயலாலி மைந்தா! * என்
கண் துயில் நீ கொண்டாய்க்கு * என் கனவளையும் கடவேனோ! 7

1205 * குயிலாலும் வளர் பொழில் சூழ் * தண் குடந்தைக் குடமாடீ! *
துயிலாத கண் இணையேன் * நின் நினைந்து துயர்வேனோ! **
முயலாலும் இள மதிக்கே * வளை இழந்தேற்கு * இது நடுவே
வயலாலி மணவாளா! * கொள்வாயோ மணிநிறமே! 8

1206 நிலையாளா! நின் வணங்க * வேண்டாயே ஆகிலும் * என்
முலையாள ஒரு நாள் * உன் அகலத்தால் ஆளாயே? **
சிலையாளா! மரம் எய்த திறலாளா! * திருமெய்ய
மலையாளா! * நீயாள வளையாள மாட்டோமே 9

1207 * மையிலங்கு கருங்குவளை * மருங்கலரும் வயலாலி *
நெய்யிலங்கு சுடர் ஆழிப் * படையானை நெடுமாலை **
கையிலங்கு வேல் கலியன் * கண்டுரைத்த தமிழ் மாலை *
ஐயிரண்டும் இவை வல்லார்க்கு * அருவினைகள் அடையாவே 10

**அடிவரவு:** தூவிரிய பிணி நீர் தான் வாள் தாராய கொண்டு குயில்
நிலையாளா மையிலங்கு கள்வன்

---

### திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி 4-9 - நும்மைத் தொழுதோம்
### (திருவிந்தளூர்)

1328 * நும்மைத் தொழுதோம் * நுந்தம் பணி செய்திருக்கும் நும்மடியோம் *
இம்மைக்கு இன்பம் பெற்றோம் * எந்தாய்! இந்தளூரீரே! **
எம்மைக் கடிதாக் கருமம் அருளி * ஆவா! என்றிரங்கி *
நம்மை ஒருகால் காட்டி நடந்தால் * நாங்கள் உய்யோமே? 1

1329 * சிந்தை தன்னுள் நீங்காதிருந்த திருவே! * மருவினிய
மைந்தா! * அந்தணாலி மாலே! * சோலை மழகளிறே! **
நந்தா விளக்கின் சுடரே! * நறையூர் நின்ற நம்பீ! * என்
எந்தாய்! இந்தளூராய்! * அடியேற்கு இறையும் இரங்காயே! 2

1330 பேசுகின்றது இதுவே * வையம் ஈரடியால் அளந்த *
மூசி வண்டு முரலும் * கண்ணி முடியீர்! ** உம்மைக் காணும்
ஆசை என்னும் * கடலில் வீழ்ந்து இங்கு அயர்த்தோம் * அயலாரும்
ஏசுகின்றது இதுவே காணும் * இந்தளூரீரே! 3

1331 ஆசை வழுவாதேத்தும் * எமக்கிங்கு இழுக்காய்த்து * அடியோர்க்குத்
தேசமறிய * உமக்கே ஆளாய்த் திரிகின்றோமுக்கு **
காசினொளியில் திகழும் வண்ணம் * காட்டீர் எம்பெருமான்! *
வாசி வல்லீர்! இந்தளூரீர்! * வாழ்ந்தே போம் நீரே 4

1332 தீ எம்பெருமான் நீர் எம்பெருமான் * திசையும் இரு நிலனு
மாய் * எம்பெருமானாகி நின்றால் * அடியோம் காணோமால் **
தாய் எம்பெருமான் * தந்தை தந்தை ஆவீர் * அடியோமுக்
கே எம்பெருமான் அல்லீரோ? நீர் * இந்தளூரீரே! 5

1333 சொல்லாது ஒழியகில்லேன் * அறிந்த சொல்லில் * நும் அடியார்[8]
எல்லாரோடும் ஒக்க * எண்ணி இருந்தீர் அடியேனை **
நல்லார் அறிவீர் தீயார் அறிவீர் * நமக்கு இவ்வுலகத்து[9] *
எல்லாம் அறிவீர் * ஈதே அறியீர் இந்தளூரீரே! 6

1334 மாட்டீரானீர் பணி நீர் கொள்ள * எம்மைப் பணி அறியா
வீட்டீர் * இதனை வேறே சொன்னோம் * இந்தளூரீரே! **
காட்டீரானீர் * நுந்தம் அடிக்கள் காட்டில் * உமக்கு இந்த
நாட்டே வந்து தொண்டரான * நாங்கள் உய்யோமே? 7

1335 முன்னை வண்ணம் பாலின் வண்ணம் * முழுதும் நிலை நின்ற *
பின்னை வண்ணம் கொண்டல் வண்ணம் * வண்ணம் எண்ணுங்கால் **
பொன்னின் வண்ணம் மணியின் வண்ணம் * புரையும் திருமேனி *
இன்ன வண்ணம் என்று காட்டீர் * இந்தளூரீரே! 8

1336 எந்தை தந்தை தம்மான் என்றென்று * எமர் ஏழேழ் அளவும்[10] *
வந்து நின்ற தொண்டரோர்க்கே * வாசி வல்லீரால் **
சிந்தை தன்னுள் முந்தி நிற்றிர் * சிறிதும் திருமேனி *
இந்த வண்ணம் என்று காட்டீர் * இந்தளூரீரே 9

1337 * ஏரார் பொழில் சூழ் * இந்தளூரில் எந்தை பெருமானை *
காரார் புறவின் மங்கை வேந்தன் * கலியனொலி செய்த **
சீரார் இன் சொல் மாலை * கற்றுத் திரிவார் உலகத்தில் *
ஆரார் அவரே * அமரர்க்கு என்றும் அமரர் ஆவாரே 10

**அடிவரவு:** நும்மை சிந்தை பேசுகின்றது ஆசை தீ சொல்லாது மாட்டீர் முன்னை எந்தை ஏரார் ஆய்ச்சியர்

---

[8] உம் அடியார்
[9] இவ்வுலகத்தில்
[10] தம்மான் என்று எமர் ஏழளவும்

## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி 5-8 - ஏழை ஏதலன்
## (திருவரங்கம் 5)

1418 * ஏழை ஏதலன் கீழ் மகன் என்னாது
இரங்கி * மற்றவற்கு இன்னருள் சுரந்து *
மாழை மான் மட நோக்கி உன் தோழி *
உம்பி எம்பி என்றொழிந்திலை ** உகந்து
தோழன் நீ எனக்கு இங்கொழி என்ற
சொற்கள் வந்து * அடியேன் மனத்து இருந்திட *
ஆழி வண்ண! நின் அடியிணை அடைந்தேன் *
அணிபொழில் திருவரங்கத்தம்மானே! 1

1419 வாத மாமகன் மர்க்கடம் விலங்கு *
மற்றோர் சாதி என்றொழிந்திலை * உகந்து
காதல் ஆதரம் கடலினும் பெருகச் * செய்
தகவினுக்கு இல்லை கைம்மாறு என்று **
கோதில் வாய்மையினாயொடும் உடனே *
உண்பன் நான் என்ற ஒண்பொருள் * எனக்கும்
ஆதல் வேண்டும் என்று அடியிணை அடைந்தேன் *
அணிபொழில் திருவரங்கத்தம்மானே! 2

1420 கடிகொள் பூம்பொழில் காமரு பொய்கை *
வைகு தாமரை வாங்கிய வேழம் *
முடியும் வண்ணம் ஓர் முழுவலி முதலை
பற்ற * மற்றது நின் சரண் நினைப்ப **
கொடிய வாய் விலங்கின்னுயிர் மலங்கக் *
கொண்ட சீற்றம் ஒன்றுண்டுளதறிந்து * உன்
அடியனேனும் வந்து அடியிணை அடைந்தேன் *
அணிபொழில் திருவரங்கத்தம்மானே! 3

1421 நஞ்சு சோர்வதோர் வெஞ்சின அரவம் *
வெருவி வந்து நின் சரண் எனச் சரணா *
நெஞ்சில் கொண்டு நின் அஞ்சிறைப் பறவைக்கு *
அடைக்கலம் கொடுத்து அருள் செய்தது அறிந்து **
வெஞ்சொலாளர்கள் நமன் தமர் கடியர் *
கொடிய செய்வனவுள * அதற்கு அடியேன்
அஞ்சி வந்து நின் அடியிணை அடைந்தேன் *
அணிபொழில் திருவரங்கத்தம்மானே! 4

1422 மாக மாநிலம் முழுவதும் வந்து இறைஞ்சும் *
மலரடி கண்ட மாமறையாளன் *

தோகை மாமயில் அன்னவர் இன்பம் *
துற்றிலாமையில் அத்த! இங்கு ஒழிந்து **
போகம் நீ எய்திப் பின்னும் நம்மிடைக்கே *
போதுவாய் என்ற பொன்னருள் * எனக்கும்
ஆக வேண்டும் என்று அடியிணை அடைந்தேன் *
அணிபொழில் திருவரங்கத்தம்மானே! 5

1423 மன்னு நான்மறை மாமுனி பெற்ற
மைந்தனை * மதியாத வெங்கூற்றம்
தன்னை அஞ்சி * நின் சரண் எனச் சரணாய்த் *
தகவில் காலனையுக முனிந்தொழியா **
பின்னை என்றும் நின் திருவடி பிரியா வண்ணம் *
எண்ணிய பேரருள் * எனக்கும்
அன்னது ஆகும் என்று அடியிணை அடைந்தேன் *
அணிபொழில் திருவரங்கத்தம்மானே! 6

1424 ஓது வாய்மையும் உவனியப் பிறப்பும் *
உனக்கு முன் தந்த அந்தணன் ஒருவன் *
காதல் என் மகன் புகலிடம் காணேன் *
கண்டு நீ தருவாய் எனக்கு என்று **
கோதில் வாய்மையினான் உனை வேண்டிய *
குறை முடித்து அவன் சிறுவனைக் கொடுத்தாய் *
ஆதலால் வந்து உன் அடியிணை அடைந்தேன் *
அணிபொழில் திருவரங்கத்தம்மானே! 7

1425 வேத வாய்மொழி அந்தணன் ஒருவன் *
எந்தை! நின் சரண் என்னுடை மனைவி *
காதல் மக்களைப் பயத்தலும் காணாள் *
கடியதோர்[11] தெய்வம் கொண்டொளிக்கும் என்றழைப்ப **
ஏதலார் முன்னே இன்னருள் அவற்குச்
செய்து * உன் மக்கள் மற்றிவர் என்று கொடுத்தாய் *
ஆதலால் வந்து உன் அடியிணை அடைந்தேன் *
அணிபொழில் திருவரங்கத்தம்மானே! 8

1426 * துளங்கு நீண்முடி அரசர் தம் குரிசில் *
தொண்டை மன்னவன் திண் திறல் ஒருவற்கு *
உளங்கொள் அன்பினோடு இன்னருள் சுரந்து *
அங்கோடு நாழிகை ஏழுடன் இருப்ப **
வளங்கொள் மந்திரம் மற்றவற்கு அருளிச்
செய்தவாறு * அடியேன் அறிந்து * உலகம்

[11] கடிய தெய்வம்

அளந்த பொன்னடியே அடைந்து உய்ந்தேன் *
அணிபொழில் திருவரங்கத்தம்மானே! 9

1427 * மாடமாளிகை சூழ் திருமங்கை
மன்னன் * ஒன்னலர் தங்களை வெல்லும் *
ஆடல்மா வலவன் கலி கன்றி *
அணிபொழில் திருவரங்கத்தம்மானை **
நீடு தொல் புகழாழி வல்லானை *
எந்தையை நெடுமாலை நினைந்த *
பாடல் பத்திவை பாடுமின் தொண்டீர்! *
பாட நும்மிடைப்[12] பாவம் நில்லாவே 10

**அடிவரவு:** ஏழை வாதம் கடி நஞ்சு மாகம் மன்னு ஓது வேதம் துளங்கு மாடம் கை

---

### திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி 6-9 - பெடை அடர்த்த
### (திருநறையூர் 6)

1528 * பெடை அடர்த்த மடவன்னம் * பிரியாது * மலர்க் கமலம்
மடல் எடுத்து மது நுகரும் * வயல் உடுத்த திருநறையூர் **
முடை அடர்த்த சிரம் ஏந்தி * மூவுலகும் பலி திரிவோன் *
இடர் கெடுத்த திருவாளன் * இணையடியே அடை நெஞ்சே! 1

1529 கழியாரும் கனசங்கம் * கலந்து எங்கும் நிறைந்தேறி *
வழியார முத்தீன்று * வளங்கொடுக்கும் திருநறையூர் **
பழியாரும் விறல் அரக்கன் * பருமுடிகள் அவை சிதற *
அழலாறும் சரம் துரந்தான் * அடியிணையே அடை நெஞ்சே! 2

1530 சுளை கொண்ட பலங்கனிகள் * தேன் பாய கதலிகளின் *
திளை கொண்ட பழம் கெழுமு * திகழ் சோலைத் திருநறையூர் **
வளை கொண்ட வண்ணத்தன் * பின் தோன்றல் * மூவுலகோடு
அளை வெண்ணெய் உண்டான் தன் * அடியிணையே அடை நெஞ்சே! 3

1531 துன்றோளித் துகிற்படலம் * துன்னி எங்கும் மாளிகை மேல் *
நின்றார வான் மூடும் * நீள் செல்வத் திருநறையூர் **
மன்றாரக் குடமாடி * வரை எடுத்து மழை தடுத்த *
குன்றாரும் திரள் தோளன் * குரைகழலே அடை நெஞ்சே! 4

---

[12] நும்முடை

1532 அகிற் குறடும் சந்தனமும் * அம்பொன்னும் அணிமுத்தும் *
மிகக் கொணர்ந்து திரை உந்தும் * வியன் பொன்னித் திருநறையூர் **
பகல் கரந்த சுடராழிப் படையான் * இவ்வுலகேழும் *
புகக் கரந்த திருவயிற்றன் * பொன்னடியே அடை நெஞ்சே! 5

1533 பொன்முத்தும் அரியுகிரும் * புழைக் கைம்மா கரிக்கோடும் *
மின்னத் தண் திரை உந்தும் * வியன் பொன்னித் திருநறையூர் **
மின்னொத்த நுண்மருங்குல் * மெல்லியலை * திருமார்பில்
மன்னத் தான் வைத்துகந்தான் * மலரடியே அடை நெஞ்சே! 6

1534 சீர் தழைத்த கதிர்ச் செந்நெல் * செங்கமலத்து இடையிடையின் *
பார் தழைத்துக் கரும்போங்கிப் * பயன் விளைக்கும் திருநறையூர் **
கார் தழைத்த திரு உருவன் * கண்ண பிரான் விண்ணவர் கோன் *
தார் தழைத்த துழாய் முடியன் * தளிரடியே அடை நெஞ்சே! 7

1535 * குலையார்ந்த பழுக்காயும் * பசுங்காயும் பாளை முத்தும் *
தலையார்ந்த இளங்கமுகின் * தடஞ்சோலைத் திருநறையூர் **
மலையார்ந்த கோலம் சேர் * மணிமாடம் மிக மன்னி *
நிலையார நின்றான் தன் * நீள்கழலே அடை நெஞ்சே! 8

1536 மறையாரும் பெருவேள்விக் * கொழும் புகை போய் வளர்ந்து எங்கும் *
நிறையார வான் மூடும் * நீள்செல்வத் திருநறையூர் **
பிறையாரும் சடையானும் * பிரமனும் முன் தொழுதேத்த *
இறையாகி நின்றான் தன் * இணையடியே அடை நெஞ்சே! 9

1537 * திண்களக மதிள் புடை சூழ் * திருநறையூர் நின்றானை *
வண்களக நிலவெறிக்கும் * வயல் மங்கை நகராளன் **
பண்களகம் பயின்ற சீர்ப் * பாடல் இவை பத்தும் வல்லார் *
விண்களகத்து இமையவராய் * வீற்றிருந்து வாழ்வாரே 10

**அடிவரவு:** பெடை கழி சுளை துன்று அகில் பொன் சீர் குலை மறை திண் கிடந்த

---

## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி 7-4 - கண் சோர
## (திருச்சேறை)

1578 * கண் சோர வெங்குருதி வந்திழிய * வெந்தழல் போல் கூந்தலாளை *
மண் சேர முலை உண்ட மாமதலாய்! * வானவர் தம் கோவே! என்று **
விண் சேரும் இளந்திங்கள் அகடுரிஞ்சு * மணி மாட மல்கு * செல்வத்
தண் சேறை எம்பெருமான் தாள் தொழுவார் காண்மின் * என் தலை -

மேலாரே 1

1579 அம்புருவ வரி நெடுங்கண் * அலர் மகளை வரை அகலத்தமர்ந்து * மல்லல்
கொம்புருவ விளங்கனி மேல் * இளங்கன்று கொண்டெறிந்த கூத்தர் -
போலாம் **
வம்பலரும் தண் சோலை வண் சேறை * வான் உந்து கோயில் மேய *
எம்பெருமான் தாள் தொழுவார் * எப்பொழுதும் என் மனத்தே
இருக்கின்றாரே 2

1580 மீதோடி வாள் எயிறு மின்னிலக * முன் விலகும் உருவினாளை *
காதோடு கொடி மூக்கு அன்று உடன் அறுத்த * கைத்தலத்தா! என்று -
நின்று **
தாதோடு வண்டலம்பும் * தண் சேறை எம்பெருமான் தாளை ஏத்தி *
போதோடு புனல் தூவும் புண்ணியரே * விண்ணவரில் பொலிகின்றாரே 3

1581 தேராளும் வாள் அரக்கன் * தென் இலங்கை வெஞ்சமத்துப் பொன்றி வீழ *
போராளும் சிலை அதனால் * பொரு கணைகள் போக்குவித்தாய் -
என்று ** நாளும்
தாராளும் வரை மார்பன் * தண் சேறை எம்பெருமான் உம்பர் ஆளும் *
பேராளன் பேரோதும் பெரியோரை * ஒரு காலும் பிரிகிலேனே 4

1582 வந்திக்கும் மற்றவர்க்கும் * மாசுடம்பில் வல்லமணர் தமக்கும் அல்லேன் *
முந்திச் சென்று அரி உருவாய் இரணியனை * முரண் அழித்த -
முதல்வர்க்கல்லால் **
சந்தப்பூ மலர்ச் சோலைத் * தண் சேறை எம்பெருமான் தாளை * நாளும்
சிந்திப்பார்க்கு என் உள்ளம் * தேனூறி எப்பொழுதும் தித்திக்குமே 5

1583 பண்டு ஏனமாய் உலகை அன்று இடந்த * பண்பாளா! என்று நின்று *
தொண்டானேன் திருவடியே துணை அல்லால் * துணையிலேன் -
சொல்லுகின்றேன் **
வண்டேந்தும் மலர்ப் புறவில் * வண் சேறை எம்பெருமான் அடியார் தம்மை *
கண்டேனுக்கு இது காணீர் * என் நெஞ்சும் கண்ணிணையும் -
களிக்குமாறே 6

1584 பைவிரியும் வரியரவில் * படுகடலுள் துயிலமர்ந்த பண்பா! என்றும் *
மைவிரியும் மணி வரை போல் * மாயவனே! என்றென்றும் வண்டார் நீலம் **
செய்விரியும் தண் சேறை எம்பெருமான் * திருவடியைச்[13] சிந்தித்தேற்கு * -
என்
ஐயறிவும் கொண்டானுக்கு ஆளானார்க்கு ஆளாம் * என் அன்பு தானே 7

1585 உண்ணாது வெங்கூற்றம் * ஓவாத[14] பாவங்கள் சேரா * மேலை

---

[13] திருவடிவை

விண்ணோரும் மண்ணோரும் வந்திறைஞ்சும் * மெந்தளிர் போல் -
அடியினானை **
பண்ணார வண்டு இயம்பும் * பைம்பொழில் சூழ் தண் சேறை அம்மான் -
தன்னை *
கண்ணாரக் கண்டுருகிக்[15] * கையாரத் தொழுவாரைக் கருதுங்காலே 8

1586 கள்ளத்தேன் பொய்யகத்தேன் ஆதலால் * போதொருகால்[16] கவலை -
என்னும் *
வெள்ளத்தேற்கு என் கொலோ? * விளை வயலுள் கரு நீலம் களைஞர் -
தாளால்
தள்ள ** தேன் மண நாறும் * தண் சேறை எம்பெருமான் தாளை * நாளும்
உள்ளத்தே வைப்பாருக்கு இது காணீர் * என் உள்ளம் உருகுமாறே 9

1587 * பூமாண் சேர் கருங்குழலார் போல் நடந்து * வயல் நின்ற பெடையோடு * -
அன்னம்
தேமாவின் இன்னிழலில் கண் துயிலும் * தண் சேறை அம்மான் தன்னை **
வாமான் தேர்ப் பரகாலன் * கலிகன்றி ஒலி மாலை கொண்டு தொண்டீர்! *
தூமாண் சேர் பொன்னடி மேல் சூட்டுமின் * நும் துணைக் கையால் -
தொழுது நின்றே 10

**அடிவரவு:** கண் அம்பு மீதோடி தேராளும் வந்திக்கும் பண்டு பைவிரியும்
உண்ணாது கள்ளத்தேன் பூமாண் தந்தை

---

**திருமங்கையாழ்வார் அருளிச் செய்த**

## பெரிய திருமொழி 8-2 - தெள்ளியீர்

**(திருக்கண்ணபுரம் 2 - தலைவியின் நிலை கண்ட தாய் தலைமகனை இயற்பழித்தும், தலைமகளது இளமைக்கு இரங்கியும் கூறிய பாசுரம்)**

1658 * தெள்ளியீர்! தேவர்க்கும் * தேவர் திருத்தக்கீர்! *
வெள்ளியீர்! வெய்ய * விழு நிதி வண்ணர் ** ஓ!
துள்ளு நீர்க் * கண்ணபுரம் தொழுதாள் இவள்
கள்வியோ! * கை வளை கொள்வது தக்கதே? 1

1659 * நீணிலா முற்றத்து * நின்று இவள் நோக்கினாள் *
காணுமோ! * கண்ணபுரம் என்று காட்டினாள் **
பாணனார் திண்ணம் இருக்க * இனி இவள்
நாணுமோ? * நன்று நன்று நறையூரர்க்கே 2

---

[14] ஓவாது
[15] கண்டிறைஞ்சி
[16] போதருகால்

1660 * அருவி சோர் வேங்கடம் * நீர்மலை என்று வாய்
வெருவினாள் * மெய்யம் வினவி இருக்கின்றாள் **
பெருகு சீர்க் * கண்ணபுரம் என்று பேசினாள்
உருகினாள் * உள் மெலிந்தாள் * இது என் கொலோ? 3

1661 உண்ணும் நாள் இல்லை * உறக்கமும் தான் இல்லை *
பெண்மையும் சால * நிறைந்திலள் பேதை தான் **
கண்ணனூர் * கண்ணபுரம் தொழும் கார்க்கடல்
வண்ணர் மேல் * எண்ணம் இவட்கு இது என் கொலோ? 4

1662 கண்ணனூர் * கண்ணபுரம் தொழும் காரிகை *
பெண்மையும்[17] தன்னுடை * உண்மை உரைக்கின்றாள் **
வெண்ணெய் உண்டு ஆப்புண்ட * வண்ணம் விளம்பினாள் *
வண்ணமும் * பொன்னிறம் ஆவது ஒழியுமே 5

1663 வடவரை நின்றும் வந்து * இன்று கணபுரம் *
இடவகை கொள்வது * யாம் என்று பேசினாள் **
மடவரல் மாதர் என் பேதை * இவர்க்கு இவள்
கடவதென்? * கண் துயில் இன்று இவர் கொள்ளவே 6

1664 * தரங்க நீர் பேசினும் * தண் மதி காயினும் *
இரங்குமோ? * எத்தனை நாள் இருந்து எள்கினாள்? **
துரங்கம் வாய் கீண்டு உகந்தானது * தொன்மையூர் *
அரங்கமே என்பது * இவள் தனக்கு ஆசையே 7

1665 தொண்டெல்லாம் நின்னடியே * தொழுது உய்யுமா
கண்டு * தான் கணபுரம் கை தொழப் போயினாள் **
வண்டுலாம் கோதை என் பேதை * மணி நிறம்
கொண்டு தான் * கோயின்மை செய்வது தக்கதே? 8

1666 முள்ளெயிறு ஏய்ந்தில * கூழை முடி கொடா *
தெள்ளியள் என்பதோர் * தேசிலள் என் செய்கேன்? **
கள்ளவிழ் சோலைக் * கணபுரம் கை தொழும்
பிள்ளையை * பிள்ளை என்றெண்ணப் பெறுவரே? 9

1667 * கார்மலி * கண்ணபுரத்து எம் அடிகளை *
பார்மலி மங்கையர் கோன் * பரகாலன் சொல் **
சீர்மலி பாடல் * இவை பத்தும் வல்லவர் *
நீர்மலி வையத்து * நீடு நிற்பார்களே 10

[17] பெண்மையென்

**அடிவரவு:** தெள்ளியீர் நீணிலா அருவி உண்ணும் கண்ணன் வடவரை தரங்கம் தொண்டு முள் கார் கரை

---

### திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி 9-9 - மூவரில்
### (திருமாலிருஞ்சோலை 2 - பிரிவாற்றாது தலைவனை நாடிச் சென்ற தலைவியின் நிலையைக் குறித்துத் தாய் இரங்கிக் கூறிய பாசுரம்)

1828 * மூவரில் முன் முதல்வன் * முழங்கார் கடலுள் கிடந்து *
பூவலருந்தி தன்னுள் * புவனம் படைத்து உண்டு உமிழ்ந்த **
தேவர்கள் நாயகனைத் * திருமாலிருஞ்சோலை நின்ற *
கோவலர் கோவிந்தனைக் * கொடியேரிடை கூடுங்கொலோ? 1

1829 * புனைவளர் பூம்பொழிலார் * பொன்னி சூழ் அரங்க நகருள்
முனைவனை * மூவுலகும் படைத்த * முதல் மூர்த்தி தன்னை **
சினைவளர் பூம்பொழில் சூழ் * திருமாலிருஞ்சோலை நின்றான் *
கனை கழல் காணுங்கொலோ? * கயற்கண்ணி எம் காரிகையே 2

1830 உண்டு உலகேழினையும் * ஒரு பாலகன் ஆலிலை மேல் *
கண் துயில் கொண்டு உகந்த * கரு மாணிக்க மாமலையை **
திண் திறல் மாகரி சேர் * திருமாலிருஞ்சோலை நின்ற *
அண்டர் தம் கோவினை இன்று * அணுகுங்கொல்? என் ஆயிழையே 3

1831 சிங்கமதாய் அவுணன் * திறல் ஆகம் முன் கீண்டு உகந்த *
பங்கய மாமலர்க் கண் * பரனை எம் பரஞ்சுடரை **
திங்கள் நன் மாமுகில் சேர் * திருமாலிருஞ்சோலை நின்ற *
நங்கள் பிரானை இன்று *நணுகுங்கொல்? என் நன்னுதலே 4

1832 தானவன் வேள்வி தன்னில் * தனியே குறளாய் நிமிர்ந்து *
வானமும்[18] மண்ணகமும் * அளந்த திரிவிக்கிரமன் **
தேனமர் பூம்பொழில் சூழ் * திருமாலிருஞ்சோலை நின்ற *
வானவர் கோனை இன்று * வணங்கித் தொழ வல்லள் கொலோ? 5

1833 * நேசம் இலாதவர்க்கும் * நினையாதவர்க்கும் அரியான் *
வாசமலர்ப் பொழில் சூழ் * வட மாமதுரைப் பிறந்தான் **
தேசம் எல்லாம் வணங்கும் * திருமாலிருஞ்சோலை நின்ற *
கேசவ நம்பி தன்னைக் * கெண்டை ஒண் கண்ணி காணுங்கொலோ? 6

1834 புள்ளினை வாய் பிளந்து * பொரு மா கரி கொம்பொசித்து *

---

[18] வானகமும்

கள்ளச் சகடு உதைத்த * கரு மாணிக்க மாமலையை **
தெள்ளருவி கொழிக்கும் * திருமாலிருஞ்சோலை நின்ற *
வள்ளலை வாணுதலாள் * வணங்கித் தொழ வல்லள் கொலோ? 7

1835 * பார்த்தனுக்கு அன்று அருளிப் * பாரதத்து ஒரு தேர் முன் நின்று
காத்தவன் தன்னை * விண்ணோர் கரு மாணிக்க மாமலையை **
தீர்த்தனைப் பூம்பொழில் சூழ் * திருமாலிருஞ்சோலை நின்ற *
மூர்த்தியைக் கை தொழவும் * முடியுங்கொல்? என் மொய்குழற்கே 8

1836 * வலம்புரி ஆழியனை * வரையார் திரள் தோளன் தன்னை *
புலம்புரி நூலவனைப் * பொழில் வேங்கட வேதியனை **
சிலம்பியல் ஆறுடைய * திருமாலிருஞ்சோலை நின்ற *
நலந்திகழ் நாரணனை * நணுகுங்கொல்? என் நன்னுதலே 9

1837 * தேடற்கு அரியவனைத் * திருமாலிருஞ்சோலை நின்ற *
ஆடல் பறவையனை * அணியாயிழை காணும் என்று **
மாடக் கொடி மதிள் சூழ் * மங்கையார் கலி கன்றி சொன்ன **
பாடல் பனுவல் பத்தும் * பயில்வார்க்கு இல்லை பாவங்களே 10

**அடிவரவு:** மூவரில் புனை உண்டு சிங்கமது தானவன் நேசம் புள்ளினை
பார்த்தனுக்கு வலம்புரி தேடற்கு எங்கள்

---

**திருமங்கையாழ்வார் அருளிச் செய்த**

## பெரிய திருமொழி 10-8 - காதில் கடிப்பு

**(க்ருஷ்ணாவதாரத்தில் ஈடுபாடு 5 - ஆய்ச்சி ஒருத்தி கண்ணனோடு ஊடுதல்)**

1922 * காதில் கடிப்பிட்டுக் * கலிங்கம் உடுத்து *
தாது நல்ல * தண்ணந்துழாய் கொடணிந்து **
போது மறுத்துப் * புறமே வந்து நின்றீர் *
ஏதுக்கு இதுவென்? * இதுவென் இதுவென்னோ? 1

1923 துவராடை உடுத்து * ஒரு செண்டு சிலுப்பி *
கவராக முடித்துக் * கலிக் கச்சுக் கட்டி **
சுவரார் கதவின் புறமே * வந்து நின்றீர் *
இவரார் இதுவென்? * இதுவென்? இதுவென்னோ? 2

1924 கருளக் கொடி ஒன்றுடையீர்! * தனிப் பாகீர் *
உருளச் சகடமது * உறக்கில்[19] நிமிர்த்தீர் **
மருளைக் கொடு பாடி வந்து * இல்லம் புகுந்தீர் *

[19] உறுக்கி

இருளத்து இதுவென்? * இதுவென்? இதுவென்னோ? 3

1925 நாமம் பலவுமுடை * நாரண நம்பீ! *
தாமத் துளபம் * மிக நாறிடுகின்றீர் **
காமன் எனப் பாடி வந்து * இல்லம் புகுந்தீர் *
ஏமத்து இதுவென்? * இதுவென்? இதுவென்னோ? 4

1926 சுற்றும் குழல் தாழச் * சுரிகை அணைத்து *
மற்றும் பல * மாமணி பொன் கொடணிந்து **
முற்றம் புகுந்து * முறுவல் செய்து நின்றீர் *
எற்றுக்கு இதுவென்? * இதுவென்? இதுவென்னோ? 5

1927 ஆனாயரும் * ஆநிரையும் அங்கொழிய *
கூனாயதோர் * கொற்ற வில் ஒன்று கையேந்தி **
போனார் இருந்தாரையும் * பார்த்துப் புகுதீர் *
ஏனோர்கள் முன்னென்? * இதுவென்? இதுவென்னோ? 6

1928 மல்லே பொருத திரள் தோள் * மணவாளீர்! *
அல்லே அறிந்தோம் * நும் மனத்தின் கருத்தை **
சொல்லாதொழியீர் * சொன்ன போதினால் வாரீர் *
எல்லே! இதுவென்? * இதுவென்? இதுவென்னோ? 7

1929 புக்காடு அரவம் * பிடித்தாட்டும் புனிதீர்! *
இக்காலங்கள் * யாம் உமக்கு ஏதொன்றும் அல்லோம் **
தக்கார் பலர் * தேவிமார் சால உடையீர் *
எக்கே! இதுவென்? * இதுவென்? இதுவென்னோ? 8

1930 ஆடி அசைந்து * ஆய் மடவாரொடு நீ போய் *
கூடிக் குரவை பிணை * கோமளப் பிள்ளாய்! **
தேடித் திருமாமகள் * மண்மகள் நிற்ப *
ஏடி! இதுவென்? * இதுவென்? இதுவென்னோ? 9

1931 * அல்லிக் கமலக் கண்ணனை * அங்கு ஓர் ஆய்ச்சி *
எல்லிப் பொழுது ஊடிய * ஊடல் திறத்தை **
கல்லின் மலி தோள் * கலியன் சொன்ன மாலை *
சொல்லித் துதிப்பார் அவர் * துக்கம் இலரே 10

**அடிவரவு:** காதில் துவர் கருளக்கொடி நாமம் சுற்றும் ஆனாயர் மல்லே
புக்கு ஆடி அல்லி புள்ளுரு

## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி 11-8 - மாற்றமுள
### ('தேஹ சம்பந்தத்தை அறுத்துத் தந்தருள வேண்டும்' என்று ஆழ்வார் எம்பெருமானைப் ப்ரார்த்தித்தல்)

2022 * மாற்றமுள * ஆகிலும் சொல்லுவன் * மக்கள்
தோற்றக் குழி * தோற்றுவிப்பாய் கொல்? என்று இன்னம் **
ஆற்றங்கரை வாழ் மரம் போல * அஞ்சுகின்றேன் *
நாற்றச் சுவை * ஊறு ஒலியாகிய நம்பீ! 1

2023 சீற்றமுள * ஆகிலும் செப்புவன் * மக்கள்
தோற்றக் குழி * தோற்றுவிப்பாய் கொல் என்று அஞ்சி **
காற்றத்து இடைப்பட்ட * கலவர் மனம் போல *
ஆற்றத் துளங்கா நிற்பன் * ஆழி வலவா! 2

2024 தூங்கார் பிறவிக்கள் * இன்னம் புகப்பெய்து *
வாங்காய் என்று சிந்தித்து * நான் அதற்கு அஞ்சி **
பாம்போடு ஒரு கூரையிலே * பயின்றாற் போல் *
தாங்காது உள்ளம் தள்ளும் * என் தாமரைக் கண்ணா! 3

2025 உருவார் பிறவிக்கள் இன்னம் * புகப்பெய்து *
திரிவாய் என்று சிந்தித்தி * என்று அதற்கு அஞ்சி **
இருபாடு எரி கொள்ளியின் * உள் எறும்பே போல் *
உருகா நிற்கும் * என் உள்ளம் ஊழி முதல்வா! 4

2026 கொள்ளக் குறையாத * இடும்பைக் குழியில் *
தள்ளி புகப்பெய்தி கொல்? * என்று அதற்கு அஞ்சி **
வெள்ளத்து இடைப்பட்ட * நரியினம் போலே *
உள்ளம் துளங்கா நிற்பன் * ஊழி முதல்வா! 5

2027 * படை நின்ற * பைந்தாமரையோடு * அணி நீலம்
மடை நின்று அலரும் * வயலாலி மணாளா! **
இடையன் எறிந்த மரமே * ஒத்திராமே *
அடைய அருளாய் * எனக்கு உந்தன் அருளே 6

2028 * வேம்பின் புழு * வேம்பன்றி உண்ணாது * அடியேன்
நான் பின்னும் * உன் சேவடி அன்றி நயவேன் **
தேம்பல் இளந்திங்கள் * சிறை விடுத்து * ஐவாய்ப்
பாம்பின் அணைப் * பள்ளி கொண்டாய் பரஞ்சோதீ! 7

2029 * அணியார் பொழில் சூழ் * அரங்க நகரப்பா! *

துணியேன் இனி * நின் அருள் அல்லது எனக்கு **
மணியே! மணி மாணிக்கமே! * மதுசூதா! *
பணியாய் எனக்கு உய்யும் வகை * பரஞ்சோதீ! 8

2030 * நந்தா நரகத்து அழுந்தா வகை * நாளும்
எந்தாய்! தொண்டரானவர்க்கு * இன்னருள் செய்வாய் **
சந்தோகா! தலைவனே! * தாமரைக் கண்ணா! *
அந்தோ! அடியேற்கு * அருளாய் உன்னருளே 9

2031 * குன்றம் எடுத்து * ஆனிரை காத்தவன் தன்னை *
மன்றில்[20] புகழ் * மங்கை மன் கலிகன்றி சொல் **
ஒன்று நின்ற ஒன்பதும் * வல்லவர் தம் மேல் *
என்றும் வினையாயின * சாரகில்லாவே 10

**அடிவரவு:** மாற்றம் சீற்றம் தூங்கார் உருவார் கொள்ள படை வேம்பின்
அணியார் நந்தா குன்றம் நிதியினை

---

**திருமங்கை ஆழ்வார் திருவடிகளே சரணம்**

[20] மலி